<u>தேதி - 25.11.2025</u>

**G.W.O.P.No**.73/2024

<u>ம.சா. 1 – திருமதி. பாண்டீஸ்வரி பிருந்தா</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனக்கும், 1 வது எதிர்மனுதாரருக்கும் 05.04.2008 ம் தேதி திருமணம் நடந்தது. ம.சா.ஆ.2 ஆன திருமணபுகைப்படத்தில் மாலையோ, தாலி கட்டுவது போலோ புகைப்படத்தில் இல்லை என்றால் சரிதான். பொதுவாக கன்னத்தில் சந்தனம்பூசுவது, வளையல் போடுவது வளைகாப்பூ நிகழ்ச்சியின் போது நடைபெறும் என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் சந்தனம் பூசிப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் டெய்லரிங் கடை வைத்துள்ளேன். திருமணம் நடந்ததாக சொல்லும் போது நான் எந்த வேலையும் பார்க்கவில்லை, வீட்டில் தான் இருந்தேன். 1 ம் மனுதாரரை எப்படி பழக்கம் என்றால் கலை நிகழ்ச்சி நடத்துவது சம்பந்தமாக எனது தாய்மாமா மூலமாக பேசுவதற்காக அடிக்கடி மதுரைக்கு வருவார், அதனால் பழக்கம். நான் துபாயில் ஒரு ஹோட்டலில் கிளப் டான்சராக வேலை பார்த்தேனா என்றால் இல்லை. நான் வெளிநாடு எதுவும் சென்றிருக்கிறேனா என்றால், 1 ம் எதிர்மனுதாரர் திருமணம் ஆன பிறகு அழைத்து சென்றார். என்னை 1 ம் எதிர்மனுதாரர் வெளிநாடு அழைத்த சென்றதாக கூறுவது பொய் என்றும், நான் துபாயில் கிளப் டான்சராக வேலை பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு பாஸ்போர்ட் இருந்தது, 1 ம் எதிர்மனுதாரர் அதை எடுத்து சென்றுவிட்டார். 2017 ம் வருடம் குழந்தையை பார்க்க வரும் போது பாஸ்போட்டை எடுத்து சென்றார். எனக்கு முதல்திருமணம் யாரோடு நடந்தது என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. எனது முதல்திருமணத்தின் மூலமாக பிரகதீஷா என்ற பெண்குழந்தை இருந்தது என்றால் சரியல்ல. திருமணம் ஆவதற்கு முன்பாக எனக்கு 17 வயது இருந்த போது ஒரு பெண்குழந்தை இருந்தது, அந்த விசயம் தெரிந்தும் 1 வது எதிர்மனுதாரர் பாஸ்கர் என்னை திருமணம் செய்து கொண்டார். அந்த பெண்குழந்தை தற்போது என் பாதுகாப்பில் தான் உள்ளது. நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் HCP (MD) No.1383/2022 என்ற

மனுவை தாக்கல் செய்தேன். அந்த மனுவில் எனக்கு ஏற்கனவே சங்கர் என்பவருடன் திருமணம் நடந்ததாகவும், அதன் மூலம் பவதாரணி என்ற குழந்தை இருப்பதாகவும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி **HCP** (**MD**) **No**.1383/2022 ல் எனக்கு சங்கருடன் திருமணமாகி, பவதாரணி என்ற குழந்தை இருப்பததாக கூறியதால், 26.08.2022 ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் உத்தரவு பகரப்பட்டது என்றால் அது பொய். 1 ம் மனுதாரருக்கும், எனக்கு 05.04.2011 ம் தேதியன்று பிரதீபா என்ற பெண்குழந்தை பிறந்தது. அதன்பின்னர் பிரதீஷ்பாண்டி என்ற ஆண்குழந்தை 20.09.2013 அன்று பிறந்தது. நான் எப்போது இருந்து குழந்தை மற்றும் கணவரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் 2017 ல் இருந்து பிரிந்து வாழ்கிறேன். நான் ஏற்கனவே **HCP** (**MD**) **No**.936/2016 என்ற வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். அந்த **HCP** (**MD**) **No**.936/2016 ன் மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த **HCP** (**MD**) **No**.936/2016 லும் எனக்கு சங்கருடன் திருமணமாகி, பவதாரணி என்ற குழந்தை இருப்பததாக கூறியுள்ளேன் என்றால் அது பொய். அந்த **HCP** (**MD**) **No**.936/2016 ல் கடந்த 08.08.2016 தேதியன்று மைனர் குழந்தைகளை தனது வசம் ஒப்படைக்க சொல்லி இம்மனுவில் கண்ட 3 முதல் 5 மனுதாரர்களுக்கு எதிராக உத்தரவு பகரப்பட்டது என்றால் சரிதான். அந்த **HCP** (**MD**) **No**.936/2016 உத்தரவுப்படி குழந்தை என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். 2017 வருடம் மே மாதம் வரை குழந்தைகள் எனது கஷ்டடியில் இருந்தார்கள். மே மாதமே குழந்தைகளை 1 ம் எதிர்மனுதாரர் கட்டாயப்படுத்தி பிக்னிக் அழைத்து செல்வதாக கூறி அழைத்து சென்றார். அதன்பிறகு அன்றைய தேதியில் புகாரோ, ஆட்கொணர்வு மனுவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2017 வருடம் மே மாதத்தில் இருந்து **HCP** (**MD**) **No**.1383/2022 இடைப்பட்ட காலத்தில் குழந்தைகளை பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. **HCP** (**MD**) **No**.1383/2022 ல் இரண்டு அமர்வு நீதியரசர்கள் முன்பாக மைனர்களை வரச்சொல்லி அவர்களிடம் கருத்து கேட்கப்பட்டது என்றால் ஆமாம். அவ்வாறு நீதியரசர்கள் குழந்தைகளிடம் கருத்து கேட்கும் போது குழந்தைகள் என்னுடன் வர மறுத்துவிட்டார்கள் என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

HCP (MD) No.1383/2022 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் என்னை மைனர் குழந்தைகளை சனி, ஞாயிறு கிழமைகள் 2, 3 எதிர்மனுதாரர்களின் வீட்டிற்கு சென்று பார்ப்பதற்கு அனுமதி கொடுத்துளளார்கள் என்றால் சரிதான். அதன்படி நான் 2, 3 எதிர்மனுதாரர்களின் வீட்டிற்கு சென்று குழந்தைகளை பார்க்க சென்ற போது என்னை அனுமதிக்கவில்லை. அவர்கள் என்னை அனுமதிக்காதது சம்பந்தமாக காவல்நிலையத்திலோ, உயர்நீதிமன்றத்திலோ புகார் செய்தேனா என்றால் தொட்டியம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் கொடுத்தது சம்பந்தமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் ஆவணப்பட்டியலில் அவ்வாறு எந்த புகார்மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், காலஅவகாசம் கொடுத்தால் நான் தாக்கல் செய்கிறேன். எனது நிரூபணவாக்குமூலத்திலும், மனுவிலும் HCP (MD) No.1383/2022 குறித்து எவ்விதமான சங்கதியும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை இத்துடன் நிறுத்தம் செய்யப்படுகிறது.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.11.27 09:59:53 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.